[1979 ஏப்ரல் 30

## இணைப்பு IV

*[620-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா. எண். 1059—க்கான விடையைக் காண்க.]*

மருத்துவமனையில் ஒருவருக்கு மரணம் ஏற்பட்டவுடனேயே நோயாளியின் உடல் அங்கு வந்திருக்கும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும். அந்த ஊரிலுள்ள உறவினர்களுக்கு மரணச் செய்தியைத் தெரிவித்து 24 மணி நேரத்திற்குள் சவத்தை எடுத்துச் செல்லுமாறும், அவ்வாறு செய்யாவிடில் கேட்பாரற்ற பிணமாக கருதப்பட்டு அவ்விடத்திலிருந்து அது அகற்றப்படும் என்றும் தெரிவித்து ஆள் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ தகவல் அனுப்பப்படுகிறது. உறவினர்கள் தொலைவில் உள்ள ஓரிடத்தில் இருந்தால் தந்தி மூலம் இறப்புச் செய்தியைத் தெரிவித்து 72 மணி நேரத்திற்குள் சவத்தை எடுத்துக் கொண்டு செல்லுமாறும், அவ்வாறு செய்யாவிடில் அது கேட்பாரற்ற பிணமாகக் கருதப்பட்டு அகற்றப்படும் என்றும் தெரிவிக்கப்படும். கேட்பாரற்ற பிணங்கள் பிணவறையில் 72 மணி நேரம் வைக்கப்பட்டிருந்துஅதன் பின் கீழ்க்கண்டவாறு அகற்றப்படும்:—

(அ) இறந்தவர் இந்து சமயத்தினராய் இருந்தால் அந்தப் பகுதியின் நகராட்சி ஆணையருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு. உரியவகையில் எரிக்கப்படுவதற்கு அல்லது புதைப்பதற்கு அவர்களிடம் அந்தப் பிணம் ஒப்படைக்கப்படும்.

(ஆ) இறந்தவர் கிறித்துவ சமயத்தினராய் இருந்தால் உள்ளூர் கிறித்துவக் குருமார்களிடம் தொடர்பு கொண்டு, அவர்களிடம் சவம் ஒப்படைக்கப்படும். இதைப்போலவே இறந்தவர் முஸ்லீம் இனத்தவராய் இருந்தால் அந்தச் சவம் உள்ளூர் சமயத் தலைவரிடம் ஒப்படைக்கப்படும்.

(இ) இறந்தவர் எந்தச்சமயத்தவர் என்பது உறுதிப்படுத்தபடாதபோது அல்லது சமயத்தலைவர்கள் இறந்தவரது உடலை எடுத்துச் செல்ல முன்வராத போது அந்தச் சவம், அப்பகுதி நகராட்சி ஆணையரிடம் ஒப்படைக்கப்படும்.

கேட்பாரற்ற பிணங்கள் நல்ல நிலையில் இருந்தால், அந்தப் பிணத்தை அதிகாரிகள் உடற்கூறு இயல் துறைக்கோ அல்லது நோய்க்குறி இயல் துறைக்கோ மருத்துவக் கல்வி கற்பிக்கும் நோக்கங்களுக்காக ஒப்படைக்கின்றனர். மருத்துவ—சட்ட வழக்குகள் சம்பந்தப்பட்ட பிணங்களைப் பொறுத்த வரையில், பிண அறுவைச் சோதனை முடிந்த பிறகு, காவலர்களிடமிருந்து வேண்டுகோள் கடிதம் பெறுவதன் பேரில் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளிடம் பிணம் ஒப்படைக்கப்படும். காவலர்கள், அதன் பின்னர் அந்தப் பிணத்தை சம்பந்தப்பட்ட நபர்களிடம் ஒப்படைப்பார்கள். காவலர்கள் கொண்டு வரும் வெளியூரைச் சேர்ந்த மருத்துவ—சட்ட வழக்குகள் சம்பந்தப்பட்ட பிணங்களைப் பொறுத்தமட்டில், பிண அறுவைச் சோதனை முடிந்த பிறகு, காவலரிடம் அந்தப் பிணம் ஒப்படைக்கப்படும். காவலர்கள், அந்தப் பிணத்தை சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைப்பார்கள்.